முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்
முன்னிலை:திரு. E. மணிகண்டன், B.A., B.L.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.
2025–ம் ஆண்டு ஜூலை மாதம் 08ம் நாள், செவ்வாய்க்கிழமை
IA.No.6/2025
இன்
RLTOP.No.11/2022
-----

எம்.பி.வேல்ராஜா ... மனுதாரர்/ எதிர்மனுதாரர்

/ எதிர்/

செல்வி.C.V. அலமேலு ... எதிர்மனுதாரர்/ மனுதாரர்

இம்மனுவானது 02.07.2025ம் தேதி இன்று என் முன் விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.P.வேல்ராஜா அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.ராஜேந்திரன் அவர்கள் ஆஜராகியும் இருந்த நிலையில், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு வாதுரைகளை கேட்டறிந்தும், வழக்குரை மற்றும் எதிர்வழக்குரை மற்றும் சாட்சிய சான்றாவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## உத்தரவு

மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பில் ஒரு சாட்சியை சான்றாவணங்களுடன் நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க அழைப்பாணை அனுப்ப உத்தரவிட வேண்டி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுவின் சுருக்கம்</u> :

இந்த வழக்கின் மனுதாரராகிய C.V.அலமேலு என்பவர் வாடகை ஒப்பந்தம் வெண்ணிலைப் பத்திரத்தில் (பதியப்படாத பத்திரம்) வாடகை அட்வான்ஸ் ரூ.4,00,000/- மற்றும் மாத வாடகை ரூ.3,000/- என்று குறிப்பிடப்பட்டு தனக்கு எழுதி கொடுத்து கையொப்பம் செய்துள்ளதாகவும், மேற்கூறிய வழக்கில் மனுதாரராகிய அலமேலு இந்த வாடகை ஒப்பந்தப் பத்திரத்தை இந்த வழக்கின் மனுதாரரே தயார் செய்தார் என்று கூறியுள்ளார் என்றும், மேற்கூறிய நபரை நீதிமன்றத்தில் வரவழைத்து விசாரித்தால் உண்மை நிலவரம் தெரியும் என்றும், மேற்கூறிய வழக்கின் எதிர்மனுதாரர் இந்த மனுதாரருக்கும் மற்றும் இவருடைய உறவினரான நடராஜன் என்பவருக்கும் 2 வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி வைத்தாகவும், ஆனால் அதற்கு இந்த இரு நபர்களும் எந்தவொரு பதில் அறிவிப்பும் இந்த வழக்கின் எதிர்மனுதாரருக்கு அனுப்பவில்லை என்றும், ஆனால் மேற்கூறிய வழக்கறிஞர் அறிவிப்பு இவர்கள் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை நீதிமன்றத்தில் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், ஆனால் இந்த வழக்கின் மனுதாரரை குறுக்கு விசாரணையின் போது இந்த வழக்கின் மனுதாரரின் வழக்கறிஞர் மேற்கூறிய ஒப்புதல் அட்டை இந்த வழக்கின் எதிர்மனுதாரரே தயார் செய்துள்ளார் என்றும், எனவே திருநகர் போஸ்ட் மாஸ்டர் அவர்களை வரவழைத்து விசாரிப்பது முக்கியமான ஒன்று என்றும், எனவே, மனுதாரர் தரப்பில் ஒரு சாட்சியை ஆவணங்களுடன் நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க அழைப்பாணை அனுப்ப உத்தரவிட வேண்டி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. இம்மனுவின் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையில் மனுவின் அவிடவிட்டில் இந்த மனுதாரர்/எதிர்மனுதாரர்

தெரிவித்துள்ள சங்கதிகளில் எதிர்மனுதாரர்/மனுதாரர் எழுத்துமூலமாக குறிப்பிட்டு உண்மை என்று ஒப்புக்கொள்ளும் சங்கதிகள் தவிர மற்ற சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை என்றும்,

உண்மையில் இந்த மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படி பிரதான வழக்கின் நடவடிக்கை வீண் காலதாமதப்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் பின்யோசனை செய்து பொய்யான சங்கதிகளை தெரிவித்து இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்பதால் இந்த மனு சட்டப்படி தள்ளுபடி செய்ய வேண்டிய ஒன்று என்றும், மனுவினை எதிர்மனுதாரர்/மனுதாரரின் உயர்ந்தபட்ச செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கூறி எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

4. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது.

**<u>தீர்மானிக்க வேண்டிய விசயம்</u>** :

5. மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**<u>தீர்வு</u> :**

6. அசல் மனுவானது வழக்கு சொத்தில் வாதியான எதிர்மனுதாரரை நீதிமன்றம் நிமித்தம் காலி செய்வற்கும், வழக்கு சொத்தின் சுவாதீனத்தை மனுதாரரிடம் ஒப்படைக்க வேண்டியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி அசல் மனுவானது 2022ம் ஆண்டு முதல் நிலுவையில் இருந்து வருகிறது. அசல் வழக்கில் மனுதாரர் தரப்பு சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, எதிர்மனுதாரர் சாட்சி விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டு, மனுதாரர் தரப்பு ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

7. இந்நிர் மனுதாரர்/எதிர்மனுதாரர், எதிர்மனுதாரர்/மனுதாரரான வேல்ராஜாவுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாகவும், அந்த வழக்கறிஞர் அறிவிப்பிற்கு எதிர்மனுதாரர்/மனுதாரர் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றும், மேற்படி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யப்பட்டதாகவும், மேற்படி ஒப்புதல் அட்டையை எதிர்மனுதாரர்/மனுதாரர் தரப்பில் ஆட்சேபணை செய்ததால், மேற்படி ஒப்புதல் அட்டை சம்பந்தமாக அதை சார்பு செய்த தபால் அதிகாரியை விசாரணை செய்ய வேண்டும் என்று மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8. மனுவை ஆட்சேபணை செய்து எதிர்மனுதாரர்/மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மனுதாரர் அசல் மனுவில் தாக்கல் செய்த எதிருரையில், மேற்படி எதிர்மனுதாரருக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியது சம்பந்தமாக எந்த ஒரு சங்கதியும் குறிப்பிடவில்லை. மேலும், அசல் வழக்கானது வாடகை சொத்திலிருந்து மனுதாரரை காலி செய்து, காலி சுவாதீனத்தை எதிர்மனுதாரரிடம் ஒப்படைக்க வேண்டும் என்று அசல் மனு தாக்கல் செய்யப்பட்ட நிலையிலும், மேற்படி அறிவிப்பு சம்பந்தமாக மனுதாரர்/எதிர்மனுதாரர் தனது பிரதான மனுவில் எதிருரையில் எவ்வித சங்கதிகளும் குறிப்பிடாத நிலையிலும், பொது ஊழியரான திருநகர் போஸ்ட் மாஸ்ட்டரை விசாரணை செய்ய வேண்டும் என்பது சட்டப்படியானது இல்லை என்று எதிர்மனுதாரர்/மனுதாரர் கூறும் வாதத்தை கருத்தில் கொண்டு இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவாக,** மனுதாரர்/எதிர்மனுதாரரின் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, பின்னர் இன்று 08.07.2025ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்) E. மணிகண்டன்.
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

**<u>இணைப்பு</u>** :

1. **<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி</u>** :இல்லை
2. **<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u>** :இல்லை
3. **<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி</u>** : இல்லை
4. **<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u>** : இல்லை

(ஒம்) E. மணிகண்டன்.
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.